யாழ். திருமறைக் கலா மன்றத்தின்
பிரமாண்டமான
தயாரிப்பு
பலிக்களம்
(பக்தி இசையுரை நாடகம்)
ஏப்ரல்
1, 2, 3, 4ஆம் திகதிகளில்
மாலை 6-45 மணிக்கு
மன்றக் கலையரங்கம்

பக்கங்கள்: நான்கு
Rigistered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

1971ஆம் ஆண்டில்
யாழ். [illegible] நடைபெற்ற
"அன்பின் [illegible]"
அமர காவியம்
மீண்டும்
பலிக்களம்
என்னும் பெயரில்
மேடையேறுகிறது!

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 16 திங்கட்கிழமை (29-03-1993) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 122

# யாழ் வர அனுமதி கேட்கிறார் அங்கிலிக்கன் ஆயர் கெனத்

## களனி பல்கலைக்கழகத்தின் இரு பிக்குகளும் கூடவருவர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

மீண்டும் யாழ்ப்பாணம் செல்வதற்கு விடுதலைப் புலிகளிடமும் ஸ்ரீலங்கா அரசிடமும் அனுமதி கோரியிருக்கிறார் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை சந்தித்து விட்டு கொழும்பு திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ மீண்டும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக அண்மையில் அறிவித்திருந்தார்.

களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு புத்த பிக்குகளையும், சில புத்திஜீவிகளையும் அழைத்து கொண்டு யாழ்ப்பாணம் வர அனுமதி கோரி அவர் விடுதலைப் புலிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

விமான மூலம் பலாலிக்கு சென்று அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு செல்ல கூட்டுப்படைகள் தலைமையகத்திடமும் அவர் அனுமதி கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது போக்குவரத்துக்கு உதவுமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவை அவர் கேட்டிருப்பதாகவும் அறிய வந்தது. (உ-3)

## காங்கேசன் வாகன அணி: நாளை பலாலியில் மாநாடு

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப்பொருள்களை வாகன அணி மூலம் குடாநாட்டுக்குள் எடுத்து வருவது சம்பந்தமான இறுதி ஏற்பாடுகள் குறித்து பலாலி இராணுவ முகாமில் நாளை நடைபெறவிருக்கும் மாநாடு ஒன்றில் ஆராயப்படவிருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்காகக் கடந்த வாரம் பலாலி சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி, அங்கிருந்து திரும்பியதும், இது குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

அப்பேச்சுகளின் பெறுபேறுகளை அடுத்து இறுதிக்கட்ட ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி இன்று பலாலி செல்வார் எனத் தெரியவருகிறது.

நாளை பலாலியில் இராணுவ அதிகாரிகளை அவர் சந்தித்து இறுதிக்கட்ட ஏற்பாடுகள் பற்றி ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

படையினரால் வவுனியாவில் திருப்பி அனுப்பப்பட்ட

# டென்மார்க் செய்தியாளர் குழு நேற்று யாழ் வந்து சேர்ந்தது

### பி.பி.ஸி. கொழும்பு செய்தியாளருக்கு அனுமதியில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29

கொழும்பில் இருந்து வட பகுதி நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் வவுனியாவில் வைத்து படையினரால் வழிமறிக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்ட மூவர் கொண்ட — டென்மார்க் தொலைக்காட்சிக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

பி.பி.ஸி. யின் கொழும்புச் செய்தியாளர் சியாக்கா நூலாவையும் கூட்டிக் கொண்டு வடக்கே வந்த சமயம் வவுனியாவில் வைத்து படையினர் இவர்களைத் திருப்பியனுப்பினர் என்பது தெரிந்ததே.

இக்குழுவினர் கொழும்பு திரும்பிச் சென்று பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்ட போது, திரு சியாக்கா நூலா தவிர ஏனையோருக்கு கிளிநொச்சி வரை செல்ல அனுமதி வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டதாம்.

அத்தகைய அனுமதியைப் பெற்று கிளிநொச்சி வரை வந்த தாங்கள், பின்னர் கிளாலி ஊடாக யாழ். வந்து சேர்ந்ததாக அக்குழுவைச் சேர்ந்த ஒருவர் குறிப்பிட்டார்.

பி. பி. ஸி. யின் ரி. வி. II சேவையில் டென்மார்க் நிலைய அதிகாரிகளாகப் பணிபுரியும் செய்தியாளர் திரு மைக்கல் ஸ்மித், தொழில்நுட்பவியலாளர்களான செல்வி. பற்றமா சிவில்ரிமாண்ட், டேவிட் லிலாண்ட் ஆகியோரே யாழ் வந்திருக்கின்றனர். (உ-3)

## யாழ். சேதங்கள் குறித்து பி.பி.ஸியில் விவரணப் படம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

தற்போது யாழ். வந்திருக்கும் பி. பி. ஸி. தொலைக்காட்சிச் சேவையைச் சேர்ந்த டென்மார்க் குழுவினர், யாழ்ப்பாண நிலைமைகள், இங்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து விவரணப் படம் ஒன்றைத் தயாரிப்பர்.

பி. பி. ஸி. உலக [illegible] தொலைக்காட்சிச் சேவையில் ஒலிபரப்புவதற்கான விவரணப் படம் ஒன்றைத் தயாரிக்கவே தாங்கள் யாழ்ப்பாணம் வந்திருப்பதாக அக்குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகளினால் யாழ். மாவட்டத்தில் சேதமுற்ற இடங்களை அவர் [illegible]

## 6 கப்பல் பொருள்கள் இம்மாதம் இறக்கப்பட்டன

### துறைமுக தொழிலாளர் சாதனை

பருத்தித்துறை துறைமுகத்தில் இம்மாதத்தில் 6 கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

போதிய இழுவைப்படகுகளோ, இறக்கும் வசதிகளோ இல்லாத போதும் தொழிலாளர்களின் திறமையால் 6 கப்பல்களில் இருந்து இம்மாதத்தில் பொருள்கள் இறக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இம்மாத முதலாம் திகதிக்குப் பின்னர் ''மெரினாதல்'', ''குமாரி'', ''குமண'', ''வாதுவ'' ஆகிய கப்பல்களில் இருந்தும், ''நில்கிரி'', கப்பலில் இருந்து இருதடவைகளும் பொருள்களை இறக்கி தொழிலாளர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

பருத்தித்துறை துறைமுகம் பாவிக்கத் தொடங்கிய பின்னர் இம்மாதத்தில் தான் அதிக எண்ணிக்கையான கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறையில் தற்போது நாள் ஒன்றுக்கு 400 மெற்றிக் தொன் பொருள்கள் இறக்கப்படுவதாகவும்—

கூடுதல் வசதிகள் வழங்கப்பட்டால் அதனை 650 மெற்றிக் தொன்னாக அதிகரிக்க முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## நில்கிரியில் மண்ணெண்ணெய் புத்தாண்டுக்கு முன் வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

புத்தாண்டுக்கு முன்பாக மற்றொரு தொகுதி மண்ணெண்ணெய் பரல்களுடன் 'நில்கிரி' கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்காக கூட்டுப் படைகள் தலைமையகம் அனுமதித்த 5 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயில் இதுவரை இரு தடவைகளில் இரண்டாயிரத்து 240 பரல்கள் எடுத்து வரப்பட்டன.

மூன்றாவது தொகுதி மண்ணெண்ணெய் பரல்களுடன் புது வருடத்துக்கு முன்னர் 'நில்கிரி' கப்பல் இங்கு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

## 'குமாரி' இன்று வந்து சேரும்

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமாரி' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

இக்கப்பலில் ஆயிரத்து 29 மெற்றிக்தொன் மா, ஆயிரத்து 150 மெற்றிக் தொன் அரிசி, 200 மெற்றிக் தொன் சீனி, 30 மெற்றிக் தொன் பருப்பு, 100 மெற்றிக் தொன் சவர்க்காரம் ஆகியவையும்—

விவசாய விரிவாக்க திணைக்களத்துக்கு நாற்றுத் தேங்காய்கள் உட்பட மற்றும் பொருள்களும்— எடுத்து வரப்படவிருக்கின்றன.

இக்கப்பலில் தபால்கள் எடுத்துவரப்படுகின்றனவா என்பது குறித்து நேற்று மாலை வரை தகவல்கள் கிடைக்கவில்லை. (உ-3)

## "வாதுவ" சேவை தொடரும்

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய ''வாதுவ'' கப்பல், அத்தியாவசியப் பொருள்களை வடக்கே ஏற்றிச் செல்லும் சேவையில் தொடர்ந்து ஈடுபடும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கே அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச்செல்லும் ''குமண'' மற்றும் ''குமாரி'' கப்பல்களுக்கு புறம்பாக மூன்றாவது கப்பலாக மேலும் ஐந்து மாதங்களுக்கு 'வாதுவ' கப்பலை புனர்வாழ்வு அமைச்சு வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

''குமண'' ''குமாரி'' கப்பல்களில் 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் பொருள்களை ஏற்றிவர முடியும் என்பதும்—

''வாதுவ'' கப்பலில் 1 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் பொருள்கள் ஏற்ற முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-3)

திருமலை — தீவுப்பகுதி

## பயணிகள், கப்பல் சேவை விரைவில் நிறுத்தப்படும்?

யாழ்ப்பாணம், மார்ச் 29

திருமலைக்கும் யாழ். தீவுப் பகுதிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் ''நகர'' பயணிகள் கப்பல் சேவை விரைவில் நிறுத்தப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வாரத்தில் மூன்று தடவைகள் இடம்பெற்ற இச்சேவை தற்போது இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எனினும் இச்சேவையில் பயணம் செய்வதற்கு போதிய எண்ணிக்கையான பயணிகள் இல்லை என்று கூறப்படுகிறது. இதனால் இந்தச் சேவையை விரைவில் நிறுத்தப் போவதாக அதனை நடத்திவரும் கப்பல் உரிமையாளர் அரசுக்கு அறிவித்திருக்கிறாராம். (உ-3)

## இன்றும் கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 29

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று திங்கட்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

மாகாணசபைத் தேர்தல்கள்;

## ஐ.தே.க. தேர்தல் சின்னத்தில் இ. தொ. கா. போட்டியிடும்!

கொழும்பு, மார்ச் 29

மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் சின்னத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடவிருக்கிறது என்று கொழும்பு தமிழ் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. கவை ஆதரிப்பதற்கு இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான திரு. தொண்டமான் நிபந்தனைகளை விதித்திருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

தோட்டத் தொழிலாளருக்கு மாதத்தில் 26 நாட்கள் வேலை வழங்குவதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்பது அந்த நிபந்தனைகளில் முக்கியமானதாகும்.

இந்த நிபந்தனைகள் மூலம் திரு. தொண்டமான் மலையகத்தில் தமிழ் மாநிலத்தை உருவாக்க முயற்சிக்கிறார் என்று பௌத்த குருமார் வர்ணித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்போது, ஐ. தே. க. தேர்தல் சின்னத்தில் — அதன் பட்டியலில் — இ. தொ. கா.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## படை முன்னேறும் முயற்சி விளானில் முறியடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

வலிகாமம் மேற்கு — விளான் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் முன்னேற முயன்றனர். புலிகளின் எதிர்ப்பால் தமது முயற்சி தோல்வியடைந்து படையினர் இழப்புகளுடன் பழைய நிலைகளுக்கு பின்வாங்கிச் சென்றனர்.

படையினர் முன்னேற முயன்ற சமயம் விடுதலைப் புலிகள் அவர்களை எதிர்கொண்டு தாக்குதல் நடத்தினர். இதனால் மோதல் மூண்டது. படையினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை. (ஒ)

## யாழ். பல்கலை மாணவரின் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் [illegible] நிக்கலஸ் ஸ்ரீலங்கா [illegible] படையினரின் தாக்குதலில் பலியானதைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் இணைந்து நடத்தும் இந்த ஊர்வலத்தில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசின் அடாவடித்தனமான நடவடிக்கைகளைக் கண்டித்து மாணவர்கள் ஜனாதிபதி மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஆகியோருக்கு கண்டன மகஜர்களையும் சமர்ப்பிப்பர். (ஒ-5)

வட தமிழீழத்தில் இருவாரங்களாக

## குடியிருப்பு பகுதிகளின் மீது பரவலாக குண்டு வீச்சுக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடதமிழீழத்தில் கடந்த இரு வாரங்களாக குடியிருப்புப் பகுதிகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் பரவலாக விமானக் குண்டுவீச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

இந்த வாரத்தில் முல்லைத்தீவு, விஸ்வமடு, மன்னார் பெரியபண்டிவிரிச்சான் மற்றும் பளை, பொன்னாலை ஆகிய பகுதிகளில் குடியிருப்பு பகுதிகள் மீது — விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

சியாமா செட்டி குண்டு வீச்சு விமானங்கள், புதிய புக்காரா விமானங்கள் ஆகியனவே இந்தப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

முல்லைத்தீவில் நடந்த விமானக் குண்டுவீச்சில் 15

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தவக்காலத்திற்கு ஏற்ற செபப் புத்தகங்கள் விற்பனைக்குண்டு. சிலுவையில் சிதறிய சிந்தனைகள், திருமணித்தியாலம், பெரிய சிலுவைப் பாதை. ஆவே மரியா, புனித சித்தாத்திரை மாதா இல்லம், இல. 92, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (24980)

### தேவை

கொக்குவிலில் ஒரு வயோதிப தாயாரை வீட்டிலிருந்து பராமரிப்பதற்கு பெண்தாதி தேவை. தங்குமிட வசதி, உணவு தரப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். தேடிவரவும். சண்முகநாதன், லட்சுமி றேடர்ஸ், கே.கே.எஸ். றோட், கொக்குவில் சந்தி. (24960)

### உடன் தேவை

2000 Wattsக்கு மேற்பட்ட Automatic Voltage Stabilizer உடன்தேவை. தொடர்பு க. நிர்மலானந்தன், இல. 52/1, கண்டி வீதி, சண்டிக்குளி. (ஆஸ்பத்திரி வீதி-கண்டி வீதி சந்தி) (24966)

### மணமகன் தேவை

யாழ். இந்து, 28 வயது, அனுசம் நட்சத்திரம், செவ்வாய் குற்றமில்லை. படித்த நல்ல குடும்பப்பாங்கும் தெய்வபக்தியும் கொண்ட பெண்ணுக்கு நல்ல பண்புள்ள மணமகன் தேவை. கௌரவமான சொந்த தொழிலுடைய இந்திய வம்சாவழியினரும் விண்ணப்பிக்கலாம். சாதகக் குறிப்பு, முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 511, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24982)

### திருமண சேவை

குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். எல்லா நாட்களிலுமே தொடர்பு கொள்ளலாம். உடனுக்குடனே பார்த்துத் தரப்படும். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். றோட், மல்லாகம். (5858)

### இலவச திருமண சேவை

26 வயது, பூராடம், செவ்வாய் 8, சுய முதலீட்டுத் தொழில் புரிபவருக்கு U. K. இல் மணப்பெண் தேவை. அழைக்க ஆவன செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24921)

### மணமகள் தேவை

38 வயது, இந்து, 7இல் செவ்வாயும், சனியும், அவிட்டம் 2, சுமாரான வருமானம் உள்ளவர். சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. தாரம் இழந்த இளம் பெண்களும் விண்ணப்பிக்கலாம். இல. 510, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24991)

33 வயது, ரோகிணி நட்சத்திரம், 8இல் செவ்வாய், ஹொலண்டில் நிரந்தர அனுமதி பெற்று தொழில்புரியும் இந்துசமய வாலிபருக்கு 25—30 வயதிற்கு உட்பட்ட படித்த, அழகிய மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் வைக்கலாம். முழுவிவரங்களுக்கு ஜாதகம், படம் ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளவும். 28/14, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். (24984)

### தவறிவிட்டது

586162446V இலக்க தேசிய அடையாள அட்டை, மன்மீட்பு நிதி ரசீது, கைக்கடிகாரம் அடங்கிய பேர்ஸ் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாலசிங்கம் இரஞ்சினி, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் என்னும் விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (24990)

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதவும், கைரேகை, எண்சோதிடம் பார்க்கவும், விவாகப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் நிச்சயிக்கவும் நேரில் சந்திக்கலாம். காலை 8-30 — 12-30. பிற்பகல் 3-00 — 6-00. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (24946)

---

ஸ்ரீ

## கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
## (29-03-1993) திருமஞ்ச வெள்ளோட்டம் திங்கட்கிழமை

### வாழ்த்துரை

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயம் நாடறிந்த கலைக் கூடங்களில் ஒன்றாகும். சிற்பாசாரியார் அமரர் ஆறுமுகம் அவர்கள் சிறந்த சிற்பக் கலைஞராக விளங்கியவர். அவரது பரம்பரை நன்கு ஒளிவீசுகின்றது.

இவ்வாறு ஒளிவீசத்தக்க வகையில் உழைத்து வருபவர்களில் திரு. ஆறுமுகம் - சீவரத்தினம் ஆசாரியார் அவர்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றார்கள். ஈழத்தில் மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் சென்று தமது கலைத் திறமையினைக் காட்டிப் பெரும்புகழ் பெற்றுள்ள சிற்பாசாரியார் சீவரத்தினம் அவர்கள் 'சிற்பரத வித்தகர்' என்னும் சிறப்புப் பட்டத்தை முன்னமே பெற்றுக் கொண்டதில் எவ்வித வியப்புமில்லை.

கோண்டாவில் அருள்மிகு தேவி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆரோகணித்து அடியார்களுக்குத் திருவருள் பாலிக்கும் வகையில் அழகுமிகு திருமஞ்சத்தினை இப்பொழுதும் உருவாக்கி இருக்கின்றார் சிற்பாசாரியார் சீவரத்தினம் அவர்கள்.

திருமஞ்சத்தினைச் செய்தவர்கள், செய்வித்தவர்கள் யாவரும் பாக்கியசாலிகளே. இப்புண்ணிய கருமத்தில் ஈடுபட்டுழைத்த அனைவரையும், ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளை முன்னிட்டு வாழ்த்துவோமாக.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை-
தங்கம்மா அப்பாக்குட்டி (ஜே.பி.)

### வெள்ளோட்ட விழா நிகழ்ச்சிகள்

காலம்: 29—03—1993 திங்கள் பிற்பகல் 4-30மணி

ஆசியுரைகள்:

1. திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் (உதவி அரசாங்க அதிபர், நல்லூர்)
2. ஆசிரியமணி - அ. பஞ்சாட்சரம் அவர்கள்
3. சிவத்தமிழ்ச் செல்வி-பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

கௌரவிப்பு:

சிற்பாசாரியார் திரு. ஆ. சீவரத்தினம் அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்கள்.

★ வெள்ளோட்ட விழா வைத் தொடர்ந்து மூன்றாம் திருவிழா இரவு உற்சவம் நடைபெறும்.

### பிரார்த்தனை உரை

நாட்டுக்கு அழகு தருபவை ஆலயங்கள்: ஆலயங்கள் இல்லாத ஊர் ஊராகாது. சிவாலயங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் பதிகளுள் ஒன்று கோண்டாவில்.

கோண்டாவிலில் உள்ள பல ஆலயங்களில் பழமையும் பெருமையும் வாய்ந்த ஓர் ஆலயம் ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம். இங்கு மகோற்சவ விழாக்கள் விதிப்படி சிறப்பாக நீண்டகாலமாக நடந்து வருவது யாவரும் அறிந்தது.

இவ்வாலயத்துக்கெனச் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய திருமஞ்சம் ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். அழகிய திருமஞ்சத்தை உருவாக்கியவர் சிற்ப கலாமணி திருநெல்வேலி சிற்பாசாரியார் ஆ. சீவரத்தினம் என்பதை அறியும் போது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.

இந்த நற்கருமங்களுக்கெல்லாம் தோன்றாத் துணையாக இருந்து அருள்புரிகின்ற ஸ்ரீ நாக பூஷணி அம்பாளின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

ஆ. மகாலிங்கம்.
உதவி அரசாங்க அதிபர், நல்லூர்.

## ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு அழகு வண்ணத் திருமஞ்சம்

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி அம்பாளுக்குச் திருமஞ்சம் ஒன்று இருந்தால்...... என்ற ஆசை அம்பாள் 4ஆம் திருவிழா உபயகாரருக்கும், அடியார்களுக்கும், பரிபாலன சபையினருக்கும் நீண்ட காலமாகவே இருந்து வந்தது. திருமஞ்சம் ஒன்று உருவாகும் வழிவைக் காட்ட வேண்டும் என்று பிராட்டியைப் பிரார்த்தித்தோம். நாகபூஷணி அம்பாளின் திருவடிகளைத் திரிகரண சுத்தியுடன் எண்ணிய எமது பிரார்த்தனை பயன் செய்தது

நாகபூஷணி அம்பாள் திருவாலயத்தில் திருமஞ்சம் ஒன்று உருவாகும் பணிக்குக் கைகொடுத்து உதவியவர்கள் இருசாரார். நான்காம் திருவிழா உபயகாரர் முதலில் கைகொடுத்து உதவினார். அவரது ஆண்டுதவினால் உந்தப்பட்ட பரிபாலன சபையினருக்கு உற்றுழி உதவ வந்தார் கலைஞர் ஆ. சீவரத்தினம் சிற்பாசாரியார் அவர்கள்.

சித்திர சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தேர், சப்பரம், மஞ்சம், சிங்காசனம், வாகனம் முதலான வற்றைக் காலத்துக் காலம் பல்வேறு ஆலயங்களுக்கும் நிர்மாணித்துக் கொடுத்துப் பேரும் புகழும் பெற்றவர் சிற்பாசாரியார் திரு. ஆ. சீவரத்தினம் அவர்கள் தமது தொழிலைத் தொண்டு முறையிற் செய்து வருபவராவார்.

கோண்டாவில் கிழக்கு நாகபூஷணி அம்பாள் திருவாலயத்தில் திருமஞ்சத்தின் வெள்ளோட்ட விழா இன்று மாலை மங்களகரமாக நடைபெறுவதையிட்டு ஆலய பரிபாலன சபை பெரிதும் மகிழ்வு கொள்ளுகின்றது.

வேதனையுறும் மக்கள் அம்பாளுடைய அருள் பெற்றுய்ய இச்சந்தர்ப்பத்தில் சமய விழாக்கள் நிகழ்வது சாலவும் பொருத்தமாகும். பரந்த அடிப்படையில் நமது சமய நெறிகள் மனதில் வேரூன்றி வளரவும். இறை நம்பிக்கையுடன் சமுதாயம் செயற்பட்டு மேலோங்க அம்பாளின் திருவடிகளை வணங்குவோமாக.

நல்லருள் புரிவாயே
நாகபூஷணித் தாயே
அல்லலை நீக்கியே
அகமகிழ்ந்தே வாழ
நல்லருள் புரிவாயே
நாகபூஷணித் தாயே

பூ. க. இராசரத்தினம்,
செயலாளர்,
பரிபாலன சபை.

[விளம்பர இலக்கம் 24981]

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணகம்: | விண்ணகம்: |
|---|---|
| 25 — 05 — 1947 | 29 — 03 — 1988 |

### அமரர் சுப்பையா அருள்ராசா
(தவம்)
(முன்னாள் கிராம சேவை அலுவலர், ஈச்சமோட்டை)

காலத்தால் அழியாத உந்தன் எண்ணம்
கற்சிலையாய் எம்மனதில் எழுந்து நின்று
ஞாலத்தே என்றென்றும் உயர்ந்து வாழ
நல்லவழி காட்டி நிதம் நிற்குதையா!
சீலத்தால், செய்தொழிலால், சேவை தன்னால்
செப்பரிய சீர்த்திபெற்ற அருள் ராசா உன்
கோலத்தால் எமைவென்ற நீயேன் இன்று
கோடிபர மானந்தப் பேறு பெற்றாய்!

துணைவி, பிள்ளைகள், அன்னை,
சகோதர, சகோதரிகள்.

பிளைச்சர் வீதி,
சண்டிக்குளி.
யாழ்ப்பாணம். (24983)

---

கோண்டாவில கிழக்கு
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம்

## வருடாந்த மகோற்சவம்—1993

### 3ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

இன்று 29 – 03 - 1993 திங்கட்கிழமை
இரவு 7 - 30 மணிமுதல் கம்பன்கழக அமைப்பாளர்

திரு. இ. ஜெயராஜ்

அவர்களது சொற்பொழிவு இடம் பெறும்

விடயம்:

**“கேட்டாயோ தோழி”**

— 3 ஆம் திருவிழா உபயகாரர்.

[24977]

---

## இடமாற்றம்

### கிருபா நகை மாளிகை

294, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி நிலையத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் இன்று (29-03-1993) திங்கள் முதல், தற்போதைய நிலையத்திற்கு எதிரேயுள்ள 144 'A' என்ற இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதென்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

''உங்கள் திருப்தியே எங்கள் சேவை''

— மு. கிருபாலன்-

கி-4721]

---

### உலர் உணவு அட்டை விநியோகம்

வலிகாமம் மேற்கு மார்ச் 29

வலிகாமம் மேற்கு உதவி அரச அதிபரின் கீழ் வரும் 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் உலர் உணவு விநியோகத்திற்கான 'அ', 'உ' நிவாரண அட்டைகள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு புதிய அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன. (த-175]

### பொருட்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 29

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தால், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் பாலர் கல்வி அபிவிருத்தி கலாசார பொருட்காட்சி ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. (இ)

### இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நாவாந்துறை கலைவாணி விளையாட்டரங்கில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ கொட்டடி இறை அன்னை வி.க. அணி எதிர் இளவாலை யங் ஹென்றியன் வி.க. அணி

★ மணிப்புரி ஐ.வி.க. அணி எதிர் நவாலி சென் பீற்றர்ஸ் வி.க அணி (உ)

---

மல்லாகம் அருள்மிகு வீரபத்திரர் ஆலய
## மஹாசங்காபிஷேக நிகழ்ச்சிகள்

இன்று 29-03-93 திங்கட்கிழமை.
பகல் — மஹா சங்காபிஷேகமும் அன்னதானமும்
இரவு — மேளக்கச்சேரி : நம்பிராயன் கைதடிப்பழனி குழுவினர்
யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் வழங்கும்
**“சத்தியவான் சாவித்திரி”** புராண நாடகம்

மல்லாகம் தொண்டர் சபையினர்
(5863)

---

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
1930 — 09 - 05

ஆண்டவன் அடியில்:
1987 — 03 — 29

தெல்லிப்பளையைச் சேர்ந்த
### அமரர் இளையவி கதிரவேலு

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்களின் நினைவுச் சுடர் எங்களின் இதயங்களில் என்றும் அணையாத தீபமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை. (24994)

மனைவி, பிள்ளைகள், மற்றும்
உற்றார், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

## இன ஒழிப்பின் உச்சக் கட்டம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளை கொழும்பில் உள்ள அரசாங்க மருந்துக் களஞ்சியம் வழங்கவில்லை. பல அத்தியாவசிய மருந்து வகைகள் தனது கையிருப்பில் இல்லை என்றும் அவை முடிவடைந்து விட்டதாகவும் கூறி, அதனால் அவற்றை வழங்க முடியவில்லை என்றும் கையை விரித்து விட்டது!

அரசாங்கத்தின் இந்த மாற்றாந்தாய்ப் போக்கினால், யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் பணம் கொடுத்து அத்தியாவசிய மருந்துகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். அரசாங்கம் கையை விரித்த போது, அரசாங்கச் செலவிலேயே இயங்கும் ஆஸ்பத்திரி பணத்துக்கு எங்கே போவது? எதுவும் செய்ய முடியாத நிலையில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களிடம் யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் நிதி உதவி கேட்டிருக்கிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் உணவுத் தட்டுப்பாடு உச்சக் கட்டத்தில் உள்ளது

அதன் விளைவாகப் போதிய உணவோ, போசாக்கான உணவோ இன்றி குடாநாட்டு மக்கள் நோயாளிகளாக மாறுகின்றனர். யாழ். ஆஸ்பத்திரியிலும் ஏனைய புறநகர் மற்றும் கிராமப்புற ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சைக்குச் செல்வோர் எண்ணிக்கை நாளாந்தம் உயர்ந்து, பெருத்துச் செல்கிறது. குடாநாட்டு மக்களில் 85 சத வீதமானோர் தொழில் வாய்ப்பின்றி, வருமானம் இன்றி வாடுகின்றார்கள். அவர்களால் வெளிச்சந்தையில் மருந்து வாங்க முடியுமா?

இத்தகையான ஒரு இக்கட்டான சூழ்நிலையை அரசாங்கமே உருவாக்கியது. அதற்கும் மேலதிகமாக, இப்போது குடாநாட்டின் பிரதான வைத்தியசாலையாக விளங்கும் போதனா ஆஸ்பத்திரிக்கு மருந்துகளை வழங்குவதில் அரசு விசமத்தனம் செய்து வருகிறது!

அரசாங்க மருந்துக் களஞ்சியம் என்ன வர்த்தக நிலையமா? முதலில் வந்தவர்களுக்கு விற்று முடித்து விட்டுப் பிந்திச் செல்வோருக்கு இல்லை என்று கூறுவதற்கு? குறைந்தளவு தொகையையே கொள்வனவு செய்திருந்தாலும் அதிலும் யாழ் ஆஸ்பத்திரிக்குரிய பங்கை எப்போது சென்றாலும் பெறக் கூடியதாக வகை செய்திருக்க வேண்டும். எங்களிடம் இருந்த மருந்து வகைகள் முடிந்து விட்டன. நீங்கள் ஏதாவது செய்யுங்கள் என்று கையை விரிப்பது என்ன நிர்வாகம்? ஏது நியாயம்?

யாழ். ஆஸ்பத்திரிக்குரிய "கோட்டாவை" அரச மருந்துக் களஞ்சிய அதிகாரிகள் வெளிச்சந்தைக்கு விற்றுப் பணத்தைச் சுருட்டிக் கொண்டார்களா? அவ்வாறில்லை என்றால் இந்தக் கைவிரிப்பு நிச்சயமாக தமிழ் மக்கள் மீது அரசு போடும் பொருளாதார, போக்குவரத்து அழுத்தங்களை விட மிகவும் மோசமானது. தமிழர்களை நோயாளர்களாக்கும் கட்டத்திற்கு அடுத்ததான கொடுமை! தமிழர்களுக்கு மருந்து கொடுக்காமல் சாகடிப்பது மறைமுகமான இன ஒழிப்பின் உச்சக்கட்டம்!

இதனை நன்றாக உணர்ந்து கொண்டு, மனித நேயத்துடன் செயற்படும் வெளிநாட்டுத் தொண்டர்நிறுவனங்கள் தமது உதவிக் கரங்களை நீட்ட வேண்டும். அத்தோடு இந்த உண்மையை உலகத்துக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டும்.

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 29

கொழும்புத்துறை மேற்கு மாதர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள — படித்து வேலை அற்றிருக்கும் பெண்களுக்கான — இலவச தையல், மனையியல் பயிற்சி வகுப்புகள் இன்று காலை 10 மணிக்கு யாழ். பிரதான வீதி, கொழும்புத்துறை மேற்கிலுள்ள இலக்கம் 161/8, வீட்டில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். (உ-162)

## ஆலயங்களில்

மூன்றாவது பங்குனித் திங்களாகிய இன்று காலை 10-30 மணிக்கு யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் அம்பாளுக்கு விசேட குளிர்த்தி அபிஷேகம் இடம்பெறும். [த]

o o o

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

புதுவருடப் பிறப்புத்தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஓ-152)

o o o

உடுவில், மார்ச் 29

வண்ணார்பண்ணை மேற்கு ஸ்ரீ அங்குசபாச பிள்ளையார் கோவில் மணவாளக் கோல வருஷாபிஷேக திருவிழாவும், அஷ்டோத்ரசத சங்காபிஷேகமும் நாளை பகல் நடைபெற உள்ளது. (உ-152)

o o o

சுழிபுரம், மார்ச் 29

சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி இலட்சார்ச்சனை பூர்த்தியை ஒட்டி இன்று பகல் விசேட சங்காபிஷேகம் நடைபெற்று இரவு சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். (உ-28)

o o o

மந்திகை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த குளிர்த்தி நிகழ்வு இன்று நடைபெறும். (உ-30)

o o o

சுழிபுரம் பறாளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தின் இலட்சார்ச்சனை கடந்த ஐந்து தினங்கள் நடைபெற்று இன்று திங்கட்கிழமை விஷேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் முடிவடையும். (உ-30)

o o o

சுழிபுரம் காளுவன் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேக தினம் இன்று திங்கட்கிழமை நடைபெறும் நாளை வருடாந்த வேள்வி விளக்கு வைத்தல் நிகழ்வு இடம்பெறும். (உ-30)

## நாளை

வைத்திய கலாநிதி சிவபாதசுந்தரத்தின் மூன்றாம் ஆண்டு ஞாபகார்த்தப் பேருரை நாளை செவ்வாய் பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

"குழந்தைகள் மத்தியில் உளவியல் நெருக்கிடு" என்னும் பொருளில் மனோ வைத்திய நிபுணர் டாக்டர் டி. ஜே. சோமசுந்தரம் பேருரை நிகழ்த்துவார். (த-18)

o o o

யாழ். மாநகர சபையின் "யுனிசெப்" நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டுள்ள நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சிகள் திட்டத்தின் கீழ் நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை காலை 9.00 மணிக்கு பணம் பொருள் கைப்பணித் திட்டக் கண்காட்சியும், விற்பனையும், சுகாதாரக் கண்காட்சியும் ஆரம்பித்து வைக்கப்படும். (உ-80)

★ மகாவலி 'பி' வலயத்தில்

# அபிவிருத்தி என்ற பெயரில் சிங்களக் குடியேற்றம் தீவிரம்!

### தமிழ் மக்கள் அகதிகளாகும் அவலநிலை

யாழ்ப்பாணம், மார்ச் 29

திருகோணமலை, மட்டக்களப்பு, மணலாறு ஆகிய பகுதிகளில் "மகாவலி அபிவிருத்தி" என்ற போர்வையில் சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

எதிர்வரும் புதன்கிழமை மட்டக்களப்பு மத்திய பகுதியில் — மகாவலி 'பி' வலயத்தில் — 500 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளன. இந்தக் குடும்பங்களையும் சேர்த்து இந்தப் பகுதியில் சிங்களக் குடும்பங்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 200 ஆக அதிகரிக்கிறது.

இந்த சிங்கள மக்களுக்காக 7 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன; செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் அடுத்த மாதத்திலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளன.

மகாவலி 'பி' வலயத்தில் சிங்களவர் மட்டுமே குடியேற்றப்படுவதால், அரசு அங்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் கரிசனையுடன் செய்து வருகிறது. அந்த மக்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சிங்களவர் குடியேற்றம் தொடர்வதால் திருமலை, மட்டக்களப்பு மற்றும் மணலாறுப் பகுதிகளில் குறிப்பிட்ட சில இடங்களில் பரம்பரையாக வாழ்ந்து வந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாகியுள்ளனர்.

## கிழக்கின் கல்வி வளர்ச்சி; அமைச்சர் மன்சூர் கவலை

கொழும்பு, மார்ச் 29

கல்வி வளர்ச்சியில் வட பகுதி முன்னணியில் நிற்கிறது; கிழக்கில் அந்த நிலை காணப்படவில்லை.

அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

வட பகுதியில் தீவிரவாதப் பிரச்சினை தலைதூக்கி இருந்தாலும், கல்வித் துறையில் எந்த விதக் குழப்பமும் இல்லை. அங்கு பாடசாலைகளும் பல்கலைக்கழகமும் சீரும் சிறப்புமாகச் செயல்படுகின்றன.

கல்வித்துறையில் வடபகுதி மாணவர்கள் ஏனைய பகுதி மாணவர்களுக்கு ஈடாக முன்னணியில் திகழ்கின்றனர். கிழக்கில் அத்தகைய ஒரு நிலையைக் காணமுடியாதது கவலைக்குரியதாகும் என்றும் அவர் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழகம் பலரும் போற்றும் வண்ணம் செயல்படாதது ஏன்? இதற்கு அரசு காரணமல்ல. இந்நிலையை மாற்றி தமிழ், முஸ்லிம் மாணவர்களும் ஒன்றாக இருந்து கல்வி கற்கும் நிலையை கிழக்குப் பல்கலைக்கழகம் ஏற்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர், மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (த-எ)

## மருத்துவ பீட மாணவனுக்கு நேற்று அஞ்சலிக் கூட்டம்

ஊளிக் கரையில் கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலுக்குப் பலியான யாழ். மருத்துவபீட மாணவன் ஞா. விக்சன் நிக்கலஸின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றன.

யாழ். மரியன்னை பேராலயத்தில் இருந்து நேற்று முற்பகல் அவரது பூதவுடல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரார்த்தனை அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் கைலாசபதி அரங்குக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலரும் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

அனைத்துப் பீடங்களின் சார்பில் மாணவ பிரதிநிதிகளும் மற்றும் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் சார்பில் திரு இன்பன், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் டாக்டர் ஸ்ரீசற்குணராசா, எஸ். பாலச்சந்திரன், கலைப் பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் உட்படப் பலர் அஞ்சலி உரையாற்றினர்.

இறுதியாக பூதவுடல் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது (ஓ 5)

## மதுரையில் குண்டு வெடிப்பு

சென்னை, மார்ச் 29

மதுரை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அடுத்து அடுத்து இடம்பெற்றன.

வேலூர் தலைமை அஞ்சல் அலுவலகத்திலும், சுந்தரராமப்பட்டி என்ற இடத்தில் உள்ள தனியாருக்குச் சொந்தமான மோட்டார் பம்ப் செற் அறையிலும் குண்டுகள் வெடித்தன.

இரண்டு சம்பவங்களிலும் எவரும் காயமடையவில்லை. எனினும், அஞ்சல் அலுவலகத்தின் சேமிப்புக் கருமபீடம் சேதம் அடைந்தது; மோட்டார் பம்ப் செற் நாசமடைந்தது. (உ-எ)

## காப்புறுதி பெற முடியாது விவசாயிகள் பெரும் அவதி

வெள்ளம் காரணமாக அழிந்த தமது பயிர்களுக்கு நஷ்ட ஈடு பெற முடியாத நிலையில் மட்டக்களப்பு விவசாயிகள் அவதியுறுகிறார்கள்.

வடக்கு - கிழக்கில் இடம்பெறும் வன்செயல்களைக் காரணம் காட்டி விவசாய காப்புறுதி அப் பிரதேசங்களில் நிறுத்தப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

விவசாயக் காப்புறுதியாக விவசாயிகள் மாதா மாதம் செலுத்திய பணத்தை விவசாயிகள் விரும்பினால் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று கமத்தொழில் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது

இதற்கிடையில் விவசாயக் கடன்களையும் விவசாய புனர்நிர்மாணத் திட்ட கடன்களையும் வழங்குவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாக விவசாயக் காப்புறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று வங்கிகள் தெரிவித்துள்ளன.

இதனால் வெறும் வங்கிக் கடனுக்கு மட்டும் விவசாயக் காப்புறுதி செய்ய வேண்டிய இக்கட்டான நிலைக்குள் மட்டக்களப்பு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

### கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஆசிரிய ஆலோசகர் சங்கக் கூட்டம் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

ஐ. நா. மனித உரிமைக் குழுவுக்கு வழங்கிய

# இலங்கையின் உறுதி மொழிகள்; படை தளபதிகளிடம் விளக்கப்படும்

### சட்டமா அதிபர் தகவல்

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவுக்கு இலங்கை அரசு வழங்கியுள்ள உறுதி மொழிகள் பற்றி முப்படைகளின் தளபதிகளுக்கு சட்டமா அதிபர் திலக் மாரப்பன விளக்கிக் கூறவிருக்கிறார்.

இதற்காக முப்படைகளின் தளபதிகளுடன் உயர்மாநாடு ஒன்றை சட்டமா அதிபர் விரைவில் நடத்தவிருப்பதாக "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

காணாமற் போனவர்களை கண்டு பிடிப்பது —

அப்படி காணாமற்போன சம்பவங்களுக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கும் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது —

காணாமற்போனவர்கள் பற்றிய ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்குழு அறிக்கையில் கூறப்பட்ட சிபார்சுகளை அமுல் நடத்துவது —

இவ்விடயங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இலங்கை அரசுத் தூதுக்குழு ஜெனிவாவில் நடந்த ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வில் உறுதியளித்து இருந்தது.

இந்த உறுதிமொழிகளையும் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயற்சிகள் எடுத்து வரப்படுவதாக இலங்கை அரசுக்குழு தெரிவித்ததையும் ஏற்று ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் அறிக்கை வெளியிட்டார். இம்முயற்சி ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனிவாக் கூட்டத்தில் இலங்கை அரசுத் தூதுக்குழுவின் தலைவர் பெபரவரி 3 ஆம் திகதியிலும், மார்ச் 3 மற்றும் 11 ஆம் திகதிகளிலும் மூன்று அறிக்கைகளை சமர்ப்பித்தார். (ஓ-எ)

## தி. மு. கவின் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 29

தமிழ் நாட்டில் வைதீக உணர்ச்சியைப் பரப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவை தி. மு. க. மாநில மாநாட்டில் தி. மு. க. பொதுச் செயலாளர் க. அன்பழகன் பேசுகையில் மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டினார்.

தமிழ் மக்களின் சுயமரியாதையைப் பாதுகாக்க தி. மு. க. தொடர்ந்து பாடுபடும் என்றும் அவர் கூறினார். (த-எ)

## அவதானிகள் குழு விரைவில் வரும்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படுவதை கண்காணிக்க சார்க் அமைப்பு நாடுகளில் இருந்து அவதானிகள் குழு ஒன்று இவ்வாரம் கொழும்பு வரவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [த-எ]

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் கட்டமாக உலர் உணவு அட்டைக்கு 1 லீற்றர் மண்ணெண்ணெயை 15 ரூபாவுக்கு இன்று முதல் விநியோகிக்கும்.

கூட்டுறவுச்சங்கத் தலைவர் சு. சிறில் மேற்படி தகவலைத் தெரிவித்தார். [த-17]

## மன்னார் ஆயர் யாழ். வருகை

மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை நேற்றுக் காலை யாழ். வந்து சேர்ந்தார்.

### குடியிருப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்கள் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீதே தாக்குதல்கள் நடத்தப்படுவதாக ஸ்ரீலங்கா அரசு கூறுகின்ற போதிலும் குண்டுவீச்சுக்களினால் பாதிக்கப்படுவது பொதுமக்கள் தான் என்று அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்

### ஐ. தே. க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடும் என்று செய்தி வெளியாகியிருக்கிறது.

இதேவேளை—

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட வேறு கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் குழுவுடன் பேச்சுகள் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் —

நாளை செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் நியமனச் சபை ஜனாதிபதியின் தலைமையில் கூடி, வேட்பாளர் பட்டியல் பற்றி இறுதி முடிவை எடுக்கவுள்ளது. (த எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண நன்றி நவிலல்

"சுன்னாகம் திரு: திருமதி ஆ. மார்க்கண்டன் B. A., B. Sc. அவர்களின் கனிஷ்ட புத்திரன் தெளரிகரன் (Accountant) அவர்களது திருமணம்

29-01-1993ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலண்டன் ஆர்சேவ் முருகன் ஆலயத்தின் திருமண மண்டபத்தில் கௌரிகரன் அவர்களுக்கும் மல்லாகம் வாசியாகிய வீ. பொன்னப்பா அவர்களின் சிரேஷ்ட புத்திரி சியாமினா அவர்களுக்கும் திருமாங்கல்யதாரணம் இனிது நிறைவேற்றது. இப்பொழுதுள்ள சூழ்நிலையால் முன் கூட்டியே அனைவருக்கும் தெரியப்படுத்த முடியாமல் போய்விட்டது. முன்கூட்டியே அறிந்து, ஒத்துழைப்பும் நல்வாழ்த்தும் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்

திரு ஆ. மார்க்கண்டன் குடும்பத்தினர்

184, Perry Rise,
Forest Hill,
London S. E. 23,
England,
U. K.

(5864)

---

## முத்துமாரி அம்மன் சனசமூக நிலையம்
## இந்து வாலிபர் சங்கம், அல்வாய்

### அறிவித்தல்

அல்வாய் ஸ்ரீ வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 06-04-1993 (செவ்வாய்க் கிழமை) நடைபெறவுள்ள இளைஞர் விழாவிற்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை என்பதனை அறியத் தருகிறோம்.

ச. பரமேஸ்வரன், தலைவர். (24979) த. சிவனேஸ்வரன், செயலாளர்.

---

# மரண அறிவித்தல்கள்

## வண. E. D. இராசரத்தினம்

உடுப்பிட்டியைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய இளையதம்பி டேவிட் இராசரத்தினம் ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் இளைப்பாறிய ஆசிரியை நேசமணியின் அன்புக் கணவரும், ஜீவாநேச இராசதேவி (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி), அமிர்த இரத்தினதேவி (ஆசிரியை), இரத்தினபாக்கியதேவி (ஆசிரியை, உடுப்பிட்டி அ. மி. கல்லூரி), முத்து இரத்தினானந்தன் (பொறியியலாளர், கொழும்பு), நேசரட்ணதேவி (ஆசிரியை, உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினசபாபதி (தபால் திணைக்களம்), மகாரட்ணம் (மாக்பெட்), புனிற்றா நிராஞ்சனி, மேரி யோசப் (பிரதம விகிதர், மன்னார் சச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதிகள் பொன்னம்மா நல்லதம்பி, தங்கம் செல்லையா, இராசம்மா சாமுவேல், திருவாளர்கள் சாமுவேல் தம்பிராசா, டானியேல் அருட்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வி மில்கா, செல்வன் இருபாகரன், செல்வன் நிரேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், திரு. அருளானந்தம் (இளைப்பாறிய ஆசிரியர்), இராசமணி, காலஞ்சென்ற முத்தம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29-03-93) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுப்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
N. மகாரத்தினம் (மருமகன்)

உடுப்பிட்டி.
(24995)

## அம்பலவாணர் தம்பிப்பிள்ளை கந்தையா

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த உயர்திரு அம்பலவாணர் — தம்பிப்பிள்ளை — கந்தையா அவர்கள் 28-03-93 அன்று காலமாகிவிட்டார்.

இவர் முன்னாள் காலி பிரபலவர்த்தகரும், அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீவியாசகம் (பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர், A.M.C யாழ்ப்பாணம்), யோகேஸ்வரன், விமலச்சந்திரன், பாலச்சந்திரன், ஸ்ரீரஞ்சன், ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி நல்லையா இரத்தினம்மா, திரு த. இரத்தினம், காலஞ்சென்ற த. இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-03-93) காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

தகவல்:
இ. தாமோதரம்பிள்ளை
(R.D.A. மன்னார்)
(மருமகன்)

அரசடிப்பிள்ளையார் கோவிலடி,
கோண்டாவில் கிழக்கு.
(24996)

---

தி. மு. க. மாநாட்டு பந்தல் தீ;

# கருணாநிதி குற்றச்சாட்டு; தமிழக அமைச்சர் மறுப்பு

சென்னை, மார்ச் 29

கோவை தி.மு.க. மாநாட்டுப் பந்தல் தீப்பற்றியதில் அ.தி.மு.கவைச் சம்பந்தப்படுத்தி தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றஞ்சாட்டியிருப்பது ஆதாரமற்றதும் அரசியல் உள்நோக்கம் கொண்டதுமாகும்.

அ.தி.மு.க இணைப் பொதுச் செயலாளரும் மாநில அமைச்சருமான எஸ். டி. சோமசுந்தரம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

மாநாட்டுப்பந்தல் தீக்கிரையான சம்பவத்தில் எவர் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பவம் பற்றி பூரண விசாரணை நடத்தப்பட்ட பின்னரே யார் இதற்குக் காரணமாக இருந்தனர் என்பது தெரிய வரும் என்றும் அவர் கூறினார். (த-எ)

---

உ

தில்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

# பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனையும் விசேட திரவ்விய ஹோமமும்



இலட்ச அர்ச்சனையை
முன்னிட்டு 26-03-1993
தொடக்கம் 06-04-1993 வரை
தினமும் இரவு
8மணி முதல் 9மணி வரை

பெரிய புராணம்
தொடர் நிகழ்த்துபவர்
"சிவ நெறித் தொண்டன்"
அற நெறிக்காவலன்
திரு. செ. சத்தியமூர்த்தி
அவர்கள்

கிரியைகளை நடத்துபவர்:
சிவஸ்ரீ சி. ஆறுமுகக்குருக்கள்

இங்ஙனம்,
பரிபாலன சபை.

தில்லையம்பதி. [24993]

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இப்புவியில்:
01 - 09 - 1920

இறைவனடியில்:
09 - 04 - 1992



## கந்தரோடை அமரர் மா. நடராசா

திதி: சுக்கில பக்கச் சஷ்டி 29-03-93

குடும்பத்தின் குலவிளக்காய் குறையாது சுடர் பரப்பி குன்றாத சேவைகளால் எம்மை நன்றாக மகிழ்வித்து பாசமாய் நேசித்த பண்பதனை மறப்போமோ?

நும்பிரிவு

ஆறிருதிங்கள் ஆகிவிட்ட போதினிலும்
நிழலுன் தனைப்போல நீங்கா நின் நினைவலைகள்
நீவிர்

அரனடி அணைந்து ஆனந்தமாய் வாழ
சிரமேற் கரங்குவித்து சேவிப்போம் யாமே

உங்கள் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருகர், பேரர்.

சித்தியார் வளவு,
கந்தரோடை. (5865)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இல ... அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

# அ.தி.மு.கவுடனான உறவை புதுப்பிக்க வேண்டாம்!

## தமிழக காங்கிரஸ் கோரிக்கை

அ.தி.மு.கவுடன் இனிமேல் உறவைப் புதுப்பித்துக் கொள்ளக் கூடாது என்று இந்திரா காங்கிரஸின் தமிழக மாநிலத் தலைவர்கள் கட்சித் தலைவர் நரசிம்மராவிடம் கேட்டுக் கொண்டனர்.

சூரஜ் குந்தார் மாநாட்டின் போது தமிழக காங்கிரஸ் தலைவர் வாழைப்பாடி ராமமூர்த்தி மற்றும் தமிழ் நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய குழு ஒன்று நரசிம்மராவைச் சந்தித்தது.

அண்மையில் சென்னையில் மாநில காங்கிரஸ் தலைவர்கள் இது தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானத்தை அவர்கள் பிரதமர் ராவுக்குச் சுட்டிக் காட்டினர்.

அ.தி.மு.க., காங்கிரஸுடன் ஒருதலைப்பட்சமாக உறவை முறித்துக் கொண்டதால் அதனுடன் இனியும் கூட்டு வைத்துக் கொள்வது முறையல்ல என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

புதுடில்லியிலுள்ள சில காங்கிரஸ் காரர்கள் தங்களை சமரசவாதிகளாக அறிவித்துக் கொண்டு இரு கட்சிகளுக்கும் இடையே மீண்டும் உறவைப் புதுப்பிக்க முயற்சிப்பதை தடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

தமிழகக் காங்கிரஸ் தலைவர்களின் கோரிக்கை தொடர்பாகத் தாம் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக நரசிம்மராவ் உறுதியளித்தார் என்று வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார். (உ-த)

## சங்கங்கள் பதிவு

வலிகாமம் மேற்கு, மார்ச் 29

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் புதிய யாப்பு விதிகளுக்கு அமைய வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 7 கிராம முன்னேற்றச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம முன்னேற்ற சங்கங்கள் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளன.

இதற்கான அத்தாட்சிப் பத்திரங்களும் வடக்கு - கிழக்கு மாகாணசபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை வடக்கு கிராம சேவகர் பிரிவிலேயே ஆகக் கூடுதலாக 5 கிராம மற்றும் மாதர் கிராம முன்னேற்றச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-175)

---

# மரண அறிவித்தல்கள்

## துரையப்பா சோமசுந்தரம்

யாழ். கொட்டடி வில்லூன்றி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த, துரையப்பா சோமசுந்தரம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை துரையப்பா [நகை வியாபாரி] தம்பதிகளின் மகனும், தனலட்சுமியின் அன்புக்கணவரும் —

சிவகணேசன் (யாழ். இந்துக் கல்லூரி 1992 உயிரியல் க. பொ. த. உயர்தர மாணவன்), ஜெயகணேசன் (யாழ். வைத்தீஸ்வர கல்லூரி க. பொ. த. உயர்தர வர்த்தக பிரிவு மாணவன்), யசோதா (யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி, ஆண்டு 9 மாணவி) ஆகியோரின் அருமைத் தந்தையும் —

து. துரைராஜா, து. கனகரட்ணம், திருமதி மகாலிங்கம் - பவளமலர் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
சோ. சிவகணேசன் (மகன்)

(24998)

## இராமுப்பிள்ளை பொன்னையா

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

தெற்கு அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் இராமுப்பிள்ளை பொன்னையா 28-03-93 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், அன்னபூரணி, அருளானந்தம் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்), பாலசுப்பிரமணியம் (முன்னாள் தெற்சந்தைப்படுத்தும் களஞ்சிய பொறுப்பாளர், தற்போது கனடா), நடராசா (நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் களஞ்சியப்பொறுப்பாளர்), மகேஸ்வரி (கனடா), பாலகிருஷ்ணன் (ஜேர்மனி), யோகரத்தினம் (யோகா பிரான்ஸ்), ஜெகநாதன் (சுவிஸ்), குகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு தந்தையும், க. சுப்பிரமணியம் (இளைப்பாறிய சிறை அதிகாரி), நடராசா (கனடா) சுரேஸபாலன் (பிரான்ஸ்), விவியன், காஞ்சனா, மல்லிகாதேவி, தேவாம்பிகை, ஞானேஸ்வரி ஆகியோரினதும் தனபாலசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களினதும் அன்பு மாமனாரும் ஆவார். பத்மினி, நந்தினி, சாந்தினி, குமுதினி, மஞ்சுளா, நிர்மலா, அஜித், இராகவன், தர்சினி, சர்மிளி, சபிதா, கவாஸ்னி, கீர்த்திகா, சிந்தூரி, ரேசவன், ஆதவன், பைரவி, அநிசு, ஸ்மதினி, மிதுலன் ஆகியோரின் அன்புப் பேரனும், கோபி, திவ்வியா, சுசித்தா, நிருபா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-3-93) திங்கட்கிழமை கோண்டாவில் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் வடக்கு கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பொ. நடராசா (மகன்)

கோண்டாவில்.
(24997)